வணிக வித்தியம்
The Journal of Business Economics and Management Studies - JBEMS
Faculty of Commerce & Management
Eastern University, Sri Lanka.

# Impact of Covid-19 on Female-headed Households - Special Study on Akkaraipattu Divisional Secretariat Division

## பெண் தலைமைத்துவ குடும்பங்களில் கோவிட் - 19 ஏற்படுத்தியுள்ள தாக்கம் - அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவு குறித்த விசேட ஆய்வு

*ஜஹிபா ராசித்* [1]
*வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*
rashidmyahya@gmail.com

*சரோஜினி மகேஸ்வரநாதன்* [2]
*வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*
maheswaranathans@esn.ac.lk

**Abstract**

COVID-19 is an international pandemic that has caused various economic, social and health impacts on people throughout the globe. It emphasized that its impact has affected various levels in Sri Lanka. The impact of COVID-19 on female-headed households in particular deserves a special study. In that way, this study was carried out to find out the impact of COVID-19 on women-headed families in Akkaraipattu District Secretariat, 126 women-headed families in Akkaraipattu were selected randomly and the information was collected through a mixed research method such as structured closed questionnaire and discussion. The results were obtained using the Statistical Software for Social Sciences (SPSS). To achieve the objectives of this study, business impact, status of livelihood, and income, food problem, debt burden, lack of savings, children's education and health impact have been considered as variables. Based on the results, the COVID-19 pandemic has caused a business negatively impact on women-headed families same time led to the loss of livelihood in those families in this study area. Further, due to COVID-19, families faced many challenges regarding food security, economic crisis, poor savings and debt burden. The education of children in families has been affected during this pandemic. The education of children in these households was also disrupted, and their overall health conditions were adversely affected. In conclusion, the study highlights the widespread socioeconomic struggles faced by female-headed families in Akkaraipattu due to the COVID-19 pandemic, emphasizing the need for targeted support and policy interventions to address their vulnerabilities.

**Keywords:** Covid-19, Female – headed Household, Standrad of Living, Health

**ஆய்வுச் சுருக்கம்**

கோவிட் - 19 சர்வதேச ரீதியில் பொருளாதார, சமூக மற்றும் சுகாதார ரீதியாகப் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்திய ஒரு பெருந்தொற்றாகும். இலங்கையிலும் அதன் தாக்கம் பல்வேறு மட்டங்களையும் பாதித்துள்ளமை முக்கியத்துவமானது. குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்களில் கோவிட் - 19 ஏற்படுத்திய தாக்கம் விசேடமாக ஆய்வு செய்யப்பட

*Corresponding* maheswaranathans@esn.ac.lk

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.*

வேண்டியதாகும். அந்த வகையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் கோவிட் - 19 ஏற்படுத்திய தாக்கத்தினைக் கண்டறியும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது அக்கரைப்பற்றிலுள்ள 126 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு கட்டமைக்கப்பட்ட மூடிய வினாக்கொத்து மற்றும் கலந்துரையாடல் போன்ற கலப்பு ஆய்வு முறை மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டு SPSS மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வு நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு தொழில் பாதிப்பு, வாழ்வாதார இழப்பு, வருமானக் குறைவு, உணவுப் பிரச்சினை, கடன் சுமை, சேமிப்புக் குறைவு, பிள்ளைகளின் கல்வி, சுகாதாரப் பாதிப்பு ஆகிய மாறிகள் பயன்படுத்தப்பட்டு முடிவுகள் விளக்கப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் கோவிட் - 19 பெருந்தொற்றானது அக்கரைப்பற்றிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களில் தொழில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதோடு அக்குடும்பங்களில் வாழ்வாதார இழப்புக்கும் வழிவகுத்துள்ளது. கோவிட் கால நெருக்கடி நிலைமைகள் காரணமாக அக்குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. மேலும் பொருளாதார நெருக்கடி காரணமாக அக்குடும்பங்களின் சேமிப்பு குறைவடைந்துள்ளதோடு அவர்கள் கடன் சுமைக்குள் தள்ளப்பட வேண்டிய நிலையினையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் அக்குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வியும் கோவிட் - 19 மூலம் பாதிப்படைந்துள்ளது. அது மாத்திரமல்லாது சுகாதார ரீதியாகவும் ஆய்வுப்பிரதேச பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவை ஆய்வு முடிவுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

**முதன்மைச் சொற்கள்:** கோவிட் - 19, பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வாழ்வாதாரம், சுகாதாரம்

## 1. அறிமுகம்

கோவிட் - 19 பெருந்தொற்றானது பல உலக நாடுகளை பல்வேறு கோணங்களில் தாக்கியுள்ள ஒரு கொடிய நோயாகும். பொருளாதார ரீதியாக மாத்திரமல்லாது சமூக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பல்வேறு எதிர்மறையான தாக்கங்களை இத்தொற்று ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட திடீரென ஏற்பட்ட முன் அனுபவம் இல்லாத இந்தப் புதிய சவாலினை எதிர்கொண்டு அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அதிலிருந்து மீள்வதற்கும் குறிப்பிட்ட கால அளவைச் செலவளிக்க வேண்டியிருந்தது. அவ்வாறே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கோவிட் உலகப் பெருந்தொற்றின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. காலநிலை மாற்றம், பணவீக்கம் போன்ற தாக்கங்களைப் போலல்லாது கோவிட் - 19 அந்நாடுகளை மிகக் கடுமையாகப் பாதித்தது. நாடு தழுவிய ரீதியான முடக்கம் மற்றும் வெளிநாட்டுப் போக்குவரத்துத் தடை என்பன அந்நாடுகளின் பொருளாதாரத்தைப் பெருமளவு பின்னடைவுக்கு இட்டுச் சென்றது.

பிரதேச, பௌதீக, சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பன்மைத்துவத்தைக் கொண்ட இலங்கையிலும் கோவிட் - 19 பெருந்தொற்றானது பல்பக்க தாக்கங்களை ஏற்படுத்தியது. அடிக்கடி நடைமுறைப்படுத்தப்பட்ட நாடு தழுவிய மற்றும் பிராந்திய ரீதியான முடக்கத்தினால் நாட்டின் பொருளாதாரம் பாரிய சரிவுக்குள்ளானது. பெருமளவான சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டதுடன் பல நிறுவனங்கள் தமது உற்பத்தி மற்றும் ஊழியர்களின் அளவைக் குறைத்தது. உலக வங்கியின் அறிக்கைப்படி (2021) தொழில் இழப்புகள் மற்றும் வருமானக் குறைவு காரணமாக 3.20 டொலர்களாகக் காணப்பட்ட வறுமைக்கோடானது 2019இல் 9.2 வீதத்திலிருந்து 2020இல் 11.7 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. மூலப் பொருட்களின் பற்றாக்குறை, அவற்றுக்கான அதிகரித்த செலவு, மின்சக்தி, எரிசக்தி வளங்களின் தட்டுப்பாடு போன்ற பல சவால்களை அவர்கள் எதிர்கொண்டனர். இதனால் பலர் தொழில்வாய்ப்பை இழந்து வருமான வழிகளை இழந்ததுடன் கடன் பொறிமுறைக்குள் சிக்குண்டனர். அதிகமானோர் நுண்நிதி நிறுவனங்களின்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

கடன் மற்றும் வட்டிப் பொறிமுறைக்குள் சிக்கினர். கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாத நலிவடைந்த சிலர் தங்களது சொத்துக்களை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கும் மேலதிகமாக சிலர் தற்கொலை செய்யக் கூடிய நிலையும் ஏற்பட்டது. விவசாயத்தை பிரதானமாகக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் பெரும்பாலும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களே காணப்படுகின்றன. அரச துறை தவிர்ந்து பெரும்பாலான மக்கள் நாளாந்த கூலிகளாகக் காணப்படுகின்றனர். இம்மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் விவசாயத்திற்கு மேலதிகமாக நன்னீர் மற்றும் உவர்நீர் மீன்பிடியும் காணப்படுகிறது. இப்பிரதேசங்கள் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. யுத்தம் மற்றும் இயற்கை மரணத்தின் காரணமாக பல பெண்கள் விதவைகளானதோடு, விதவைகளுக்கு அப்பால் பல்வேறு காரணங்களால் விவாகரத்துக்கு உள்ளான பெண்களும் தமது குடும்பங்களை வழிநடாத்துவதற்காக தொழில்களில் ஈடுபடுகின்றனர். கோவிட் - 19 காரணமாக இவர்களது நாளாந்த பொருளாதாரச் செயற்பாடுகள் கணிசமாகப் பாதிக்கப்பட்டன.

ஏனைய பிரதேசங்கள் போலவே அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவு கோவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும். குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் அதன் தாக்கம் கணிசமானதாக அவதானிக்கப்பட்டது. மேலும் இவ்வாய்வானது அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள 28 கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளடங்கலாக சுமார் 2520 பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் கோவிட் - 19 பெருந்தொற்றானது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை ஆராய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

பொதுவாக உலகளாவிய ரீதியில் கொவிட் - 19 பெருந்தொற்று பெண் தலைமைத்துவக் குடும்பங்களை பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி சமூக மற்றும் உளவியல் ரீதியாகவும் பல்வேறு சவால்களுக்கு உட்படுத்தியுள்ளது (Makate and Makate, 2023; Kunyanga et al., 2023 and Lotta et al., 2020). Maheswaranathan (2021) என்பவரால் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோவிட் - 19 பெருந்தொற்றானது வீட்டுத்துறையின் பொருளாதார நிலையை பாதித்தோடு, கடன் சுமை, குடும்பப் பொறுப்பு தொடர்பான சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதனைக் கண்டறிந்துள்ளார். Luna & Whetstone (2022) என்போர் மேற்கொண்ட ஆய்வில் கோவிட் - 19 பெருந்தொற்றானது சர்வதேச அளவில் மக்களின் சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் என அனைத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்தியுள்ளது என்றும் குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழும் பெண்களை கோவிட் - 19 மோசமாகத் தாக்கியுள்ளதென எனவும் கண்டறிந்துள்ளனர். இலங்கை மத்திய வங்கி, 2022 அறிக்கையின் படி இலங்கையில் முறைசார் மற்றும் முறைசாரா சுற்றுலாத் துறைகளில் காணப்படும் ஊழியர்களில் 67 வீதமான பெண்கள் கோவிட் - 19 காரணமாக தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர். வீட்டுச் சூழலை மையப்படுத்திய சிறு வியாபாரங்களும் முடக்குதல் காலப்பிரிவில் ஆண்கள் ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் பெண்களால் அது முடியாததொன்றாகி விட்டதாக குறிப்பிடப்படுகின்றது (Saroor, 2020).

இலங்கையில் வருடாவருடம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்ற நிலையில், கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் கூட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தொகை அதிகரித்த நிலையிலேயே உள்ளது. மேலும் இவர்கள் தங்களது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதற்காக பல்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எவ்வாறெனினும் கோவிட் - 19 காலப்குதியில் பாதிக்கப்பட் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் தொடர்பான ஆய்வுகள் மிக அரிதாகவே மேற்கொள்ளப்பட்டாலும், ஆய்வுப் பிரதேசமான அக்கரைப்பற்று பிரதேசத்தை மையப்படுத்தி எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் அங்கு கோவிட் - 19 பெண் தலைமைத்துவ குடும்பங்களில் எத்தகைய தாக்கத்தை

ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு விடை காணும் நோக்கோடு வாழ்வாதாரம், வருமானம், கல்வி, சுகாதாரம், சேமிப்பு மற்றும் கடன் சுமை என்ற அடிப்படையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

**2. முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு**

கோவிட் - 19 பெண் தலைமைத்துவ குடும்பங்களில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆய்வுகளை மீளாய்வு செய்வதாக இப்பகுதி காணப்படுகின்றது. Rajaram (2009) இந்தியாவின் தேசிய குடும்ப சுகாதார அளவீட்டை வைத்து மேற்கொண்ட ஆய்வில், வறுமையின் வாழ்க்கைத்தரக் குறிகாட்டியை அடிப்படையாக வைத்து நோக்கும் போது ஆண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களை விட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஓரளவு வறுமையாக இருக்கின்றன எனக் கண்டறிந்துள்ளார். Katapa (2005) ஆண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களை ஒப்பிட்டு தன்சானியாவில் மேற்கொண்ட ஆய்வில் கிராமப் புறங்களில் அதிகமான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் காணப்படுவதாகவும் அவை சிறியதாகவும் குறைந்தளவு ஆண்களைக் கொண்டதாகவும் வானொலி மற்றும் போதுமான உணவு என்பன இல்லாமல் காணப்படுவதாகவும் கண்டறிந்துள்ளார்.

Hamidu & Munishi (2022) ஆகியோரால் தன்சானியாவில் வீதியோர விற்பனையில் ஈடுபடும் பெண்களை கவனத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக பெரும்பாலான பெண்கள் தொழில்களை இழந்துள்ளமை, ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமை, குடும்ப ரீதியான வன்முறைகள் அதிகரித்தமை மற்றும் அனைத்திற்கும் மேலாக ஒரு வேளை உணவுடன் காலம் கடத்த வேண்டிய நிலை ஏற்பட்டமை போன்ற பல சிக்கல்களுக்கு முகங் கொடுத்தமையை கண்டறிந்துள்ளனர். Sefidgarbaei & Mansouri (2022) என்போர் தமது ஆய்வில் கோவிட் பெருந்தொற்றானது பல தாக்கங்களை பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் ஏற்படுத்தியுள்ளமையை அதாவது குடும்பத்தை தலைமையேற்று நடாத்தும் ஈரானியப் பெண்களுக்கு மத்தியில் தொழில் தொடர்பான பாதுகாப்பின்மை, தங்குமிடம் தொடர்பான பிரச்சினைகள், பாலியல் தொல்லைகள், மகிழ்ச்சியின்மை மற்றும் மன ரீதியான பதகளிப்பு போன்ற தாக்கங்களை கோவிட் - 19 ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளனர். Sumalatha et al. (2021) என்பவரால் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது வேலை செய்யும் நிலைமை, வாழ்வாதாரம், வீட்டு நிலைமைகள், சுகாதார நிலைமைகள், அரச உதவிகள் என்பவற்றை மையமாக வைத்து நோக்குகையில் பெண் வீட்டுப் பணியாளர்களுக்கு மத்தியில் கடுமையான வேலையிழப்பு, அதனூடான வருமான இழப்பு, வேலையின் அளவில் அதிகரிப்பு என்பவற்றை ஏற்படுத்தியதாகக் நிரூபித்துள்ளனர்.

Singh & Kuar (2022) என்பவர்களால் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அதிகரித்த உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பின்மை, சுகாதார வசதிகளை அணுகுவதற்கான தடை, அசைவதற்கான தடை, வளங்களும் சேமிப்புகளும் குறைவடைந்தமை போன்ற பல மேலதிக வீட்டுச் சுமைகளை பெண்கள் அனுபவித்ததாக சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறே இலங்கையிலும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் பல்வேறு வகையான சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றன. அவை அவ்வாறான பெண்களின் வாழ்விலும் அவர்களில் தங்கி வாழ்வோரின் வாழ்விலும் பல்வேறுபட்ட குழப்ப நிலைகளைத் தோற்றுவித்துள்ளன. குடும்பத்தலைமையின் பாலினம், இனம், குடும்பத்தலைமையின் வேலை நிலைமை, விவாக நிலை மற்றும் அவர்கள் வாழும் மாகாணம் என்பன வீட்டுத்துறையினர் மத்தியில் வறுமை ஏற்படுவது தொடர்பில் முக்கிய தாக்கம் செலுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் ஒப்பீட்டளவில் ஆண் தலைமை தாங்கும் குடும்பங்களை விட பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் 60 வீதம் வரை வறுமையாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Jayathilaka & Wijesinghe, 2020).

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

Akalu & Wang (2023) ஆகியோர் உணவுப் பாதுகாப்பு அனுபவ அளவீட்டை பயன்படுத்தி (FIES) எதியோப்பியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் 27 வீதமான வீட்டுத்துறையினர் நடுத்தரமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்ததாக் குறிப்பிட்டுள்ளனர். ஆண்களை விட பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் வேறுபட்ட அடிப்படைகளில் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்ததாக மேலும் அவர்கள் குறிப்பிகின்றனர். குடும்பத் தலைமையின் கல்வித்தரமானது உணவுப் பாதுகாப்பின்மையைத் தீர்மானிக்கும் முக்கிய குறிகாட்டிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அவ்வாறே அடிப்படையான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு உணவுப் பாதுகாப்பின்மையைக் கணிசமானளவு குறைக்கின்றது. மேலும் வருமான மாற்றம் மற்றும் குடும்பத்தின் அளவு என்பனவும் உணவுப் பாதுகாப்பின்மையைத் தீர்மானிக்கவல்லன என்று குறிப்பிடுகின்றனர் (Akalu & Wang, 2023).

ஈரானின் தெஹ்ரான் மாகாணத்தை மையப்படுத்தி Pakravan et al. (2021) என்போர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோவிட் - 19 ஏற்படுத்திய தொழில் மற்றும் வருமான இழப்பின் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உணவுப் பாதுகாப்பின்மை உக்கிரமடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. Women (2015) அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு மற்றும் லஹுகல பிரதேசங்களை மையப்படுத்தி மேற்கொண்ட ஆய்வில் அப்பிரதேசங்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உருவாவதற்கான மிகப் பிரதான காரணமாக கணவரின் இறப்பு காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. Abdul Rauf et al. (2022) அம்பாறை மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் அம்பாறை மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் சேவைத்துறையை விட உற்பத்தித்துறையில் கோவிட் - 19 கடுமையான தாக்கத்தை விளைவித்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இலக்கியங்களை மீளாய்வு செய்த அடிப்படையில் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கோவிட் - 19 சமூகக் கட்டமைப்பில் குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்களில் ஏற்படுத்தியுள்ள கடுமையான தாக்கத்தை பல்வேறு மாறிகளின் மூலம் அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக தொழில் பாதிப்பு, வருமான இழப்பு, உணவுப் பாதுகாப்பின்மை, சுகாதார ரீதியான சவால்கள் போன்ற பல பாதிப்புகளை பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்கொண்டமை பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்தி நிற்கின்றது.

## 3. ஆய்வு முறையியல்

பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் கோவிட் பெருந்தொற்றின் தாக்கம் எனும் தலைப்பிலான இவ்வாய்வில் சாரா மாறியாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் கோவிட் பெருந்தொற்றின் தாக்கம் என்பதும் சார்ந்த மாறிகளாக தொழில், வாழ்வாதாரம், வருமானம், உணவு, கடன், சேமிப்பு, பிள்ளைகளின் கல்வி மற்றும் சுகாதாரம் என்பனவும் காணப்படுகின்றன. ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் நோக்குடன் அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள 28 கிராம சேவகர் பிரிவுகளில் காணப்படும் 2520 பெண் தலைமைத்துவ குடும்பங்களில் 126 பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் குடும்ப உறுப்பினர்கள் எளிய எழுமாற்று அடிப்படையில் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு நான்கு வருடங்களுக்கு அதாவது 2019 - 2023 காலப்பகுதி செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான கலப்பு ஆய்வு முறையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது வினாக்கொத்து மற்றும் நேர்காணல் ஆகிய ஆய்வு முறைகள் மூலம் முதலாம் நிலைத் தரவுகள் சேகரித்துள்ளதோடு, இரண்டாம் நிலைத் தரவுகளாக பிரதேச செயலக அறிக்கைகள், புள்ளிவிபரவியல் கையேடுகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அறிக்கைகள், பொலிஸ் நிலைய அறிக்கைகள், வலயக்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

கல்விப் பணிமனை அறிக்கைகள், குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிபர திணைக்கள அறிக்கைகள், இணையத்தளம் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்தின் முதலாம் பகுதி தனிப்பட்ட மற்றும் பொதுவான Likert Scale முறையிலான வினாக்களை கொண்டுள்ள அதேநேரம் துலங்கல்களை வெளிப்படுத்துவதற்காக உறுதியாக ஏற்றுக் கொள்ளவில்லை, ஏற்றுக் கொள்ளவில்லை, ஓரளவு ஏற்றுக்கொள்கின்றேன், ஏற்றுக் கொள்கின்றேன், உறுதியாக ஏற்றுக் கொள்கின்றேன் ஆகிய ஐந்து தெரிவுகள் வழங்கப்பட்டது. இரண்டாம் பகுதி கோவிட் - 19 மூலம் அக்குடும்பங்கள் எதிர்நோக்கிய பாதிப்புக்கள் தொடர்பான வினாக்களையும் கொண்டுள்ளது. மாதிரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞான புள்ளிவிபரவியல் மென்பொருள் SPSS 14 ஐ பயன்படுத்தி விபரணப்புள்ளிவிபரவியல் மூலமாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### 3.1. தீர்மானமெடுத்தல்

ஒவ்வொரு மாறியையும் அளவிடும் குறிகாட்டிகளுக்கு வழங்கப்பட்ட துலங்கல்களை அடிப்படையாக வைத்து தனித்தனியாக இடைப்பெறுமதி மற்றும் நியம விலகல் என்பன கணிப்பிடப்பட்டது. அவ்வாறு கணிப்பிடப்பட்ட இடைப்பெறுமதி மொத்தமாகக் கூட்டப்பட்டு ஓரளவான தாக்கம், நடுத்தர அளவான தாக்கம், அதிக தாக்கம் என்ற மூன்று வகையான தீர்மானங்கள் பெறப்பட்டது.

## 4. ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடலும்

இங்கு ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தரவுகள் தனிப்பட்ட மற்றும் ஆய்வுத்தரவுகளாக விளக்கப்படுகின்றது.

### 4.1. தனிப்பட்ட தரவுகள்

**வயது**

இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 126 குடும்பத் தலைவிகளை அவர்களது வயது அடிப்படையில் வகைப்படுத்திய போது 8 பெண்கள் 20 - 30 வயதுடையவர்களாகவும் 23 பேர் 31 - 40 வரையான வயதுகளைக் கொண்டவர்களாகக் காணப்படும் அதேவேளை 41 - 50 வரையான வயதுகளில் 35 பெண்களும் 51 - 60 வரையான வயதுகளில் 29 பெண்களும் தங்களது குடும்பங்களைத் தலைமை தாங்கி நடாத்துவது ஆய்வுமூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் 126 பெண்களில் 31 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். தரவுகளின் அடிப்படையில் 41 - 50 வரையான வயதினுள் காணப்படும் பெண்கள் தமது குடும்பங்களை தலைமை தாங்க வேண்டி ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகக் காணப்படுகின்றது.

**தொழில்**

தொழில் அடிப்படையில் நோக்குகின்ற போது 126 பெண்களில் 3 பேர் அரச துறையிலும் 10 பேர் தனியார் துறையிலும் வேலை செய்கின்றனர். அவ்வாறே 77 பேர் சுயதொழிலிலும் 36 பேர் கூலித்தொழிலிலும் ஈடுபடுகின்றனர். தமது குடும்பங்களைப் பொறுப்பேற்று நடாத்தும் 61 வீதத்திற்கும் அதிகமான பெண்கள் சுயதொழிலில் ஈடுபடுகின்றனர் என்பதனை ஆய்வுமுடிவுகள் வெளிப்படுத்துகின்றது.

**கல்வித்தகைமை**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களின் கல்வியறிவு தொடர்பாக நோக்குகின்றபோது 13 பேர் பாடசாலைக் கல்வியைப் முழுமையாகவே பெறாதவர்களாகவும் 42 பேர் தரம் 1 - 5 வரையான கல்வியைப் பெற்றவர்களாகவும் காணப்படும் அதேவேளை தரம் 6 - 10 வரையான கல்வியை பெற்றவர்களாக 49 பெண்களும் காணப்படுகின்றனர். அத்துடன்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

க.பொ.த. சாதாரண தரம் வரைக்கும் கல்வியைத் தொடர்ந்த பெண்கள் 17 பேர்களாகவும் காணப்பட்டனர். மேலும் 3 பேர் க.பொ.த. உயர் தரம் வரை கற்றவர்களாகவும் காணப்படும் அதேவேளை பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்களாக 2 பேர் காணப்பட்டனர். அவர்களுக்கு மத்தியில் விசேட கல்வியைப் பெற்ற ஒரு பெண்ணும் காணப்பட்டார் என்பதும் அவதானிக்கத்தக்கதாகும். பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் கணிசமானவை தரம் 6 - 10 வரை கல்விகற்ற பெண்களை உள்ளடக்கியிருக்கிறது என்பது தெளிவாகிறது.

**வருமானம்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களின் மாதாந்த வருமானம் தொடர்பாக, 103 பேர் மாதாந்த வருமானமாக ரூபா 25000 விடக் குறைவாகப் பெறுவோராகவும் 10 பேர் 25001 - 30000 ரூபா வரையிலான மாதாந்த வருமானத்தினையும் அவ்வாறே ரூபா 30001 - 35000 வரையிலான மாதாந்த வருமானத்தினை 07 பெண்களும் ரூபா 35001 - 40000 ரூபா வரையிலான மாதாந்த வருமானத்தினை 04 பெண்களும் பெறுகின்றனர். அத்துடன் ரூபா 40000 மேலதிகமான மாதாந்த வருமானத்தினை 02 பெண்கள் பெறுகின்றனர். இதனடிப்படையில் நோக்குகின்ற போது அக்கரைப்பற்றிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களில் மிகக் கணிசமானவர்கள் தமது மாதாந்த வருமானமாக ரூபா 25000 விடக் குறைவாகப் பெறுகின்றமை அவதானிக்கத்தக்க விடயமாகக் காணப்படுகின்றது.

**குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை**

பெண் தலைமைத்துவ குடும்பங்களில் காணப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை நோக்கும் போது 82 குடும்பங்களில் 3 பேருக்கு குறைவான உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். அவ்வாறே 42 குடும்பங்களில் 4 முதல் 6 பேருக்கு இடைப்பட்ட உறுப்பினர்கள் காணப்படுவதோடு 2 குடும்பங்களில் 6 பேருக்கு மேற்பட்ட உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். பெண் தலைமைத்துவ குடும்பங்களில் மிகப்பெரும்பாலானவை 3 இற்கு குறைவான குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு காணப்படுகின்றமை அவதானிக்கத்தக்கதாகும். இளம் பராய விவாகரத்து மற்றும் விதவை நிலை காரணமாக வயதில் மூத்த பிள்ளைகள் திருமணமாகிச் செல்வதனால் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது.

**4.2. ஆய்வுத் தகவல்கள்**

பெண் தலைமைத்துவ குடும்பங்களில் கோவிட் - 19 ஏற்படுத்திய தாக்கம் என்பது தொழில் வாழ்வாதாரம், வருமானம், உணவு, கடன், சேமிப்பு, பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் ஆகிய சாரா மாறிகளைக் கொண்டு அளவிடப்பட்டு அது தொடர்பான தகவல்கள் கீழ்வரும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. பண்புரீதியான ஆய்வுக்காக பதிலிறுப்பாளர்களிடம் நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் தெரிவு செய்யப்பட்ட நேர்காணல்கள் மாத்திரம் எடுத்துக் காட்டாக இங்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றிலிருந்து பெறப்பட்ட அவதானங்களும் விளக்கப்பட்டுள்ளன.

**தொழில் மற்றும் வாழ்வாதாரம்**

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தொழில் மற்றும் வாழ்வாதாரம் என்பவற்றை கோவிட் - 19 எந்தளவு பாதித்துள்ளது என்பது நான்கு கூற்றுக்களால் மதிப்பிடப்பட்டு இக்கூற்றுக்களின் இடை மற்றும் நியம விலகல் மூலம் மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் தொழில் மாறியின் இடைப் பெறுமதியானது 3.15 ஆகக் காணப்படுகிறது. இப்பெறுமதியானது 2.5 மற்றும் 3.5 க்கு இடைப்பட்டதாகக் காணப்படுவதனால் கோவிட் பெருந்தொற்றானது பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் தொழிலில் மத்திமமான பாதிப்பினைச் செலுத்தியுள்ளமை புலனாகின்றது. இம் மாறியின் நியம விலகலானது 1.08 என்றவாறு அமைந்துள்ளது. இது தொழில் பாதிப்பு என்ற விடயத்தில் ஓரளவு உறுதியான தன்மை காணப்படுவதை சுட்டி நிற்கின்றது. சில பெண்கள் அரச துறையில் பணியாற்றுவதும் பெருமளவான பெண்கள்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

சுயதொழிலில் ஈடுபடுவதும் தொழில் பாதிப்பின் அளவைக் குறைத்துள்ளதுடன் நியம விலகலும் 01 என்ற பெறுமதியை விட அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கிராமப் புறமொன்றில் வசிக்கும் பெண் ஒருவர் கோவிட் - 19 இன் தாக்கம் குறித்த தனது அனுபவத்தைப் பின்வருமாறு பகிர்கின்றார்.

*''எனது கணவர் கடையொன்றில் வேலை செய்தவர். கோவிட் காலத்தில் அவரது தொழிலை இழந்தமையினால் மற்றுமொரு தொழிலினை செய்வதற்காக விதவையான எனது தாயிடமும் கூலி வேலை செய்யும் எனது சகோதரனிடமும் பணம் பெற்றுத்தருமாறு என்னை துன்புறுத்தி இறுதியில் என்னை விவாகரத்துச் செய்துவிட்டார். என்னையும் எனது இரு பெண் பிள்ளைகளையும் கவனிப்பதற்காக எனக்குத் தெரிந்த சில சுய தொழில்களைச் செய்வதற்கு முயற்சித்தேன். எனினும் முழுமையான முடக்க காலத்தில் எந்த தொழில் முயற்சியும் கைகூடவில்லை என்பதுடன் அவை எனக்கு நட்டத்திற்கு மேல் நட்டத்தையே தந்தன. மனமுவந்த தனவந்தர்கள் எனக்கு உதவி செய்ய முன்வந்தமையினால் நான் எனது பிள்ளைகளுக்கு தாயாக இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.*

(பெண், வயது - 26)

*''எனது கணவர் என்னை விட்டுப் பிரிந்து நான்கு வருடங்களாகி விட்டது. கேக், வட்டிலப்பம் போன்ற இனிப்புப் பண்டங்களை தயாரித்து விற்பனை செய்யும் சிறு வருமானத்திலேயே எனது மூன்று சிறு பிள்ளைகளையும் பராமரித்து வருகின்றேன். கோவிட் காலப்பகுதியில் முட்டை மற்றும் சீனி போன்ற பொருட்களுக்கு நிலவிய உயர்ந்த விலை மற்றும் அவற்றுக்கான தட்டுப்பாடு காரணமாக எனது வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அதேநேரம் முறையாக விவாகரத்துப் பெறவில்லை என்பதால் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படுவதும் எனக்கு கிடைப்பதில்லை. இதனால் எனது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றேன்.*

(பதிலிறுப்பாளர் - 2, வயது - 35)

**வருமானம்**

கோவிட் - 19 காலப்பகுதியல் ஏற்பட்ட வருமானக் குறைவினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட குறிகாட்டிகளின் இடைப்பெறுமதி 4.03ஆக அமைந்துள்ளது. இப் பெறுமதியானது 3.5 ஐ விட அதிகம் என்பதால் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் கோவிட் - 19 காரணமாக வருமானம் குறைவடைந்துள்ளமை தெளிவாகின்றது.

வீடு வீடாகச் சென்று தொழில் புரியும் பெண்ணொருவர் தனது கோவிட் - 19 கால அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது,

*''நான் வசதி படைத்த மற்றும் அரச தொழில்களுக்குச் செல்வோரின் வீடுகளை சுத்தம் செய்தல், சமையலுக்கு உதவி செய்தல் போன்ற வேலைகளைச்செய்து சம்பளத்தைப் பெற்றுக்கொள்வேன். சில நேரம் அங்குள்ள வேறு சில வேலைகளையும் செய்வேன். சில சந்தர்ப்பங்களில் கூலிக்கு மேலதிகமாக உணவுப் பொருட்களும் கிடைக்கும். அவை ஆறுதலாக அமையும். எனினும் கோவிட் காரணமாக ஏற்பட்ட முடக்கத்தினால் வாடிக்கையான வீடுகளில் கூட வேலைக்குச் செல்ல முடியாத நிலை தோன்றி தொழிலை இழக்க நேரிட்டது''* என மிகவும் வேதனையுடன் தெரிவித்தார்.

(பதிலிறுப்பாளர் - 3, வயது - 48)

**உணவுப் பிரச்சினை**

உணவுப் பாதுகாப்பு என்ற மாறியை மதிப்பிடுவதற்காக நான்கு குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டன. இம் மாறியின் நான்கு குறிகாட்டிகளும் முறையே 4.28, 3.72, 3.60, 3.97

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

ஆகிய இடைப்பெறுமதிகளைக் கொண்டிருந்தன. மேலும் உணவுப் பிரச்சினையினை மதிப்பிட்ட ஒட்டுமொத்த மாறியின் இடைப்பெறுமதி 3.97 என்பதாகக் காணப்பட்டது. இது 3.5 பெறுமதியை விட அதிகம் என்பதால் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உணவுப் பிரச்சினை, கோவிட் - 19 காலத்தில் உயர்ந்தளவான தாக்கத்தைக் கொண்டிருந்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த இன்னுமொரு பெண் கோவிட் காலத்து தனது அனுபவத்தை விவரிக்கும் போது,

*''கோவிட் காலத்தில் மரக்கறிகள் மற்றும் மீன் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் விலையும் அதிகமாக காணப்பட்டது. பொதுவாக கிராமப்புறங்களில் வாகனங்களில் பொருட்களை விற்பவர்கள் அதிக விலைக்கு விற்றதுடன் பழைய மரக்கறிகளையும் விற்றனர். பிறரது தயவில் வாழும் எனக்கு கை கொடுத்தது சமுர்த்தி உத்தியோகத்தர் வழங்கிய கருங்கோழிகள் தான். நிறைய நாட்கள் முட்டைப் பொரியலுடன் தான் எமது நாட்கள் கழிந்தன''* எனக் கூறி கண் கலங்கினார்.

(பதிலிறுப்பாளர் - 4, வயது - 43)

**கடன் சுமை மற்றும் அதன் குறிகாட்டிகள் தொடர்பான மதிப்பீடு**

கோவிட் - 19 காலப்பகுதியிலான கடன் சுமை மாறிகளின் இடைப்பெறுமானங்கள் முறையே 4.04, 4.22, 4.28, 2.97 என்பதாகவும் காணப்படுகின்றது. மேலும் கடன் சுமை தொடர்பான ஒட்டுமொத்த மாறிகளின் இடைப்பெறுமதி 4.07 என்பதானது பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் கடன் சுமை உயர்ந்தளவான தாக்கத்தைக் கொண்டிருந்தமையினை காட்டுகின்றது.

கோவிட் - 19 இல் பாதிக்கப்பட்ட பெண் தனது கடன் சுமை தொடர்பாக பின்வருமாறு விபரிக்கின்றார்.

*''எனது குடும்பத்தை சிறப்பாக பராமரித்து வந்த எனது கணவர் திடீர் விபத்தொன்றில் ஊனமானதன் காரணமாக அவரால் தொழிலுக்கு செல்ல முடியவில்லை. வீட்டில் தையல் தொழிலை நான் மேற்கொண்டு வந்தாலும் அவரது மருத்துவச் செலவுகள் உட்பட எமது பிள்ளைகளையும் பராமரிப்பதற்கு அவ்வருமானம் போதுமாக இருக்கவில்லை. கோவிட் காரணமாக தொழிலும் கடுமையாகப் பாதித்ததால் கடனுக்கு மேல் கடன் பெற வேண்டியதாயிற்று. கடன் வழங்கியவர்களுக்கும் கஸ்டம் என்பதால் அவர் என் திருமணப் பரிசாக வழங்கிய நகையைக் கூட விற்று கடனைத் தீர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது''* என அங்கலாய்த்தார்.

(பதிலிறுப்பாளர் - 5, வயது - 38)

இது தொடர்பில் Jayathilaka and Wijesinghe (2020) என்போர் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஏனைய குடும்பங்களை விட வறுமைக்கு உட்படக் கூடிய வாய்ப்பு 60 வீதமளவில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

**சேமிப்பு மற்றும் அதன் குறிகாட்டிகள் தொடர்பான மதிப்பீடு**

சேமிப்பு தொடர்பான நிலைமையினை ஆய்வு செய்யும் முகமாக திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சேமிப்புக் குறைவு எனும் மாறியின் இடைப்பெறுமதி 4.27 ஆகவும் இப்பெறுமதி இடைப்பெறுமதி 3.5 ஐ விட அதிகமாக இருப்பதன் மூலம் அக்கரைப்பற்றில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சேமிப்பில் கோவிட் - 19 உயர்ந்தளவான தாக்கத்தைச் செலுத்தியுள்ளமை தெளிவாகின்றது. மேலும் சுயதொழிலில் ஈடுபடும் பெண் தனது சேமிப்பு தொடர்பாக கூறுகையில்,

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 

*''எனது கணவர் இறக்கும் போது எனக்கு 03 பெண் பிள்ளைகள், மூத்த பிள்ளை தரம் 09இல் கற்றுக் கொண்டிருந்தாள். இளைய பிள்ளை பாலர் வகுப்புக்குச் சென்று கொண்டிருந்தாள். நானும் வெளியூரைச் சேர்ந்தவள் என்பதால் பிறர் உதவி செய்வதை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கவில்லை. எனக்குத் தெரிந்த இடியப்பம் தயாரித்து விற்கும் தொழிலைச் செய்து வாழ்க்கையை ஓட்டினேன். பெண் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக பணம் சேர்ப்பதற்காக அயலவர்களிடம் சீட்டுக்கும் சேர்ந்தேன். தொழில் நன்றாக இருக்கும் போது பிரச்சினை இருக்கவில்லை. முடக்குதல் காரணமாக சாப்பாட்டுக்கடைகள் மூடியதால் எனது தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் சீட்டுக் கட்டுவதற்குரிய பணத்தைச் சேர்க்க முடியவில்லை. என்னைப் போல் பலருக்கும் இந்த நிலைமை இருந்ததால் ஒரு சீட்டினை கடைசி வரை ஒழுங்காக முடிப்பது சிரமமாகவே போய்விட்டது''* எனக் கூறினார்.

(பதிலிறுப்பாளர் - 6, வயது - 46)

**பிள்ளைகளின் கல்வி**

பிள்ளைகளின் கல்வி தொடர்பான ஆய்வு முடிவுகள் முறையே 3.77, 3.62, 3.58, 3.76 ஆகிய இடைப்பெறுமதிகளைக் கொண்டிருந்த அதேவேளை நான்கு குறிகாட்டிகளினதும் ஒட்டுமொத்த இடைப்பெறுமதி 3.5 ஐ விட அதிகம் என்பதால் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் அவர்களது பிள்ளைகளின் கல்வியை கோவிட் - 19 உயர்ந்தளவாக தாக்கியுள்ளது என்பது தெளிவாகின்றது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண் தலைமைதாங்கும் பெண்ணொருவர் தனது பிள்ளைகளின் கல்வி தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*''எனது கணவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றது முதல் நான் அயலவர்களுடன் சேர்ந்து கூலித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். எனக்கு பாடசாலை செல்லும் 4 பிள்ளைகள் உள்ளனர். கோவிட் முடக்கக் காலப்பகுதியில் பாடசாலைகள் இயங்காமையால் நிகழ்நிலையில் பாடங்கள் நடைபெற்றன. என்னிடம் இருந்த சாதாரண கைத்தொலைபேசிக்கு மேலதிகமாக கஷ்டப்பட்டு ஒரு ஸ்மார்ட் கைப்பேசி வாங்கினேன். எனினும் 4 பிள்ளைகளதும் கற்றல் நேரங்கள் வித்தியாசமாக இருந்ததால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் எனது மகனால் கூட ஒழுங்காக கற்க முடியாத நிலை ஏற்பட்டது''* எனக் குறிப்பிட்டார்.

(பதிலிறுப்பாளர் - 7, வயது - 52)

**சுகாதாரம்**

சுகாதார பாதிப்பு தொடர்பாக ஆய்வு செய்யப்பட்ட குறிகாட்டிகளது இடைப்பெறுமதிகள் முறையே 2.37, 3.40, 3.63, 3.78 என்பதாகக் காணப்பட்டதுடன் சுகாதார பாதிப்பு மாறியின் ஒட்டுமொத்த இடைப்பெறுமதியானது 3.30 என்பது பெண் தலைமைத்துவ குடும்பங்களில் சுகாதார பாதிப்பு கோவிட் - 19 காலப்பகுதியில் நடுத்தரவளவான தாக்கத்தைச் செலுத்தியுள்ளமையை விளங்கிக் கொள்ளலாம்.

கோவிட் - 19 இன் மூலம் தான் எதிர்கொண்ட உயர்ந்த சுகாதார தாக்கம் பற்றி தன் அனுபவத்தை பெண்ணொருவர் இவ்வாறு பதிவு செய்கிறார்.

*''எனது கணவர் இறந்த பின்னர் நானும் எனது 4 பிள்ளைகளும் சேர்ந்து முறுக்குத் தீனிகள் உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தோம். எனது மூத்த மகன் உற்பத்திப் பொருட்களை கடைகளுக்குச் சென்று விற்று வருவான். கொரோனா வைரஸ் அவனைத் தாக்கியதில் அவன் இறந்து போனான். ஒரேயொரு ஆண் பிள்ளையை நான் இழந்ததானது எனது பெண் பிள்ளைகள் மற்றும் மொத்த குடும்பத்தினது எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிட்டது''.*

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

### 5. ஆய்வின் முடிவுகள்

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் கோவிட் - 19 ஏற்படுத்திய தாக்கம் எனும் இவ்வாய்வானது அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி முதனிலைத் தரவுகளானது கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்களினூடான Likert scale முறையைப் பயன்படுத்தி தரவு சேகரிக்கப்பட்டுள்ளதுடன் சேகரிக்கப்பட்ட தரவுகள் SPSS ஊடாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் கோவிட் - 19 பெருந்தொற்றானது சமூகத்தின் ஏனைய துறைகளைப் பாதித்துள்ளது போலவே அக்கரைப்பற்றிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களையும் வெகுவாகப் பாதித்துள்ளமை தெளிவாகின்றது. குறிப்பாக அத்தகைய குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட பொருளாதார மற்றும் சமூகக் குறிகாட்டிகளில் அதன் தாக்கம் அதிகமாக இருந்தமை அவதானிக்கப்படத்தக்கதாகும். அக்குடும்பங்களில் வாழ்வாதாரம், வருமானம் மற்றும் சேமிப்பு போன்றவற்றை அது கடுமையாகத் தாக்கியமையால் அவர்கள் கடன் சுமைக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும் தொழில் பாதிப்பு நடுத்தர அளவான தாக்கத்தைச் செலுத்தியுள்ளமையும், வாழ்வாதார இழப்பு நடுத்தர அளவான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. வருமானக் குறைவு கோவிட் - 19 பெருந்தொற்றானது உயர்ந்தளவான தாக்கத்தைக் கொண்டிருந்தது, உணவுப் பாதுகாப்பு உயர்ந்தளவான தாக்கத்தைக் கொண்டிருந்தது. கடன் சுமை பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் அது நடுத்தர அளவான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது என்பதும் புலனாகின்றது. சேமிப்பு குறைவு பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சேமிப்பில் கோவிட் - 19 பெருந்தொற்றானது உயர்ந்தளவான தாக்கத்தைக் கொண்டிருந்தது. பிள்ளைகளின் கல்வி பாதிப்பு அக்கரைப்பற்றிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களில் அவர்களது பிள்ளைகளின் கல்வியை கோவிட் - 19 பெருந்தொற்றானது உயர்ந்தளவாகத் தாக்கியுள்ளது, சுகாதார பாதிப்பு அக்கரைப்பற்றிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களில் குறைந்தளவானவர்களே கோவிட் - 19 தொற்றுக்கு உட்பட நேர்ந்துள்ளது.

### 6. ஆய்வின் பரிந்துரைகள்

தையல், கால்நடை வளர்ப்பு மற்றும் உணவுப்பண்டங்கள் தயாரிப்பு போன்ற சுய தொழிலில் ஊக்குவிப்பதற்குரிய வினைத்திறனான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உணவுப் பொருட்கள் மற்றும் நாளாந்த வீட்டுப் பாவனைக்குரிய அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்துவதானது எதிர்பாராத அனர்த்தங்களின் போது கூட தடையற்ற தொழில் வாய்ப்பையும் வருமானத்தையும் கிடைக்கச் செய்யும்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தமது வீடுகள் மற்றும் வெற்றுக் காணிகளில் வீட்டுத் தோட்டங்கள் மற்றும் தமக்கு முடியுமான உணவுற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவதானது அனர்த்த நிலைமைகளில் உணவுத்தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த உதவும்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தமது பிள்ளைகளின் கல்வி விடயத்தில் பிள்ளைகளை சுய கற்றலில் ஊக்குவிக்க வேண்டும்.

சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுவதில் அதீத கவனம் செலுத்தப்படவேண்டும்.

வறுமை ஒழிப்புத் திட்டங்கள் வருமானத்தை ஈட்டித்தரக் கூடியதாக அமைவதுடன் பெண்தலைமைத்துவ குடும்பங்களை மையப்படுத்தியதாக அல்லது அவர்கள் மீது விசேட கவனம் செலுத்தியதாக அமைய வேண்டும்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

**உசாத்துணை**


Abdul Rauf, A. L., Gnei Shihara, L. M., Fathima Nishla Manazir, M. N., & Thilsath Ahamed, N. (2022). Effect of Covid-19 on Small and Medium-sized Enterprises in Ampara District Sri Lanka, (1-12).

Akalu, L. S., & Wang, H. (2023). Does the Female-Headed Household suffer more than the Male-Headed from Covid-19 Impact on Food Security? Evidence from Ethiopia. *Journal of Agriculture and Food Research*, *12*, 100563.

Chant, S. (2008). The 'Feminisation of Poverty' and the 'Feminisation'of Anti-Poverty Programmes: Room for Revision? *The Journal of Development Studies*, *44*(2), 165-197.

Hamidu, K. M., & Munishi, E. J. (2022). The Covid-19 Outbreak and the Disruption of Women-Headed Families' Livelihood in Dar es Salaam, Tanzania. In *Sustainable Education and Development–Making Cities and Human Settlements Inclusive, Safe, Resilient, and Sustainable: Proceedings of the Applied Research Conference in Africa (ARCA), 2021 10* (352-364).

Javed, Z. H., & Asif, A. (2011). Female Households and Poverty: A Case Study of Faisalabad District. *International Journal of Peace and Development Studies*, *2*(2), 37-44.

Jayathilaka, A., & Wijesinghe, M. D. J. W. (2020). Female Headship and Poverty in Sri Lanka: A Household Level Analysis. *International Journal of Research and Innovation in Applied Science (IJRIAS)*, *5*(09), 2454-6194.

Katapa, R. S. (2006). A Comparison of Female-and Male-Headed Households in Tanzania and Poverty Implications. *Journal of Biosocial Science*, *38*(3), 327-339.

Kunyanga, C. N., Byskov, M. F., Hyams, K., Mburu, S., Werikhe, G., & Bett, R. (2023). Influence of COVID-19 Pandemic on Food Market Prices and Food Supply in Urban Markets in Nairobi, Kenya. *Sustainability*, *15*(2), 1304. https://doi.org/10.3390/su15021304

KC, Luna, & Whetstone, C. (2022). Women, Peace, and Security and Increasing Gendered Risk in the Era of Covid -19: Insights from Nepal and Sri Lanka. *Global Studies Quarterly*, *2*(3), 1-13.

Lotta G., Wenham C., Nunes J., Pimenta D.N. (2020). Community health workers reveal COVID-19 disaster in Brazil. Lancet. 396:365–366. doi: 10.1016/S0140-6736(20)31521-X.

Maheswaranathan, S. (2021). The Impact of Covid 19 Pandemic on the Living Standard of Female-Headed Migrant Workers: Special Reference with Eravur Pattu DS Division. *Contemporary Development Issues in South Asia*, Edited Book, 20-35.

Makate M, Makate C. (2023). Leaving No Women Behind: Evaluating the Impact of the COVID-19 Pandemic on Livelihood Outcomes in Kenya and Ethiopia. Int J Environ Res Public Health. 13;20(6):5048. doi: 10.3390/ijerph20065048. PMID: 36981957; PMCID: PMC10049247.


© *Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.*

Meegaswatta, T. N. (2021). The Balancing Act: Employed Women navigating the Covid-19 Lockdown in Sri Lanka. *South Asian Survey*, *28*(1), 157-171.

Pakravan-Charvadeh, M. R., Mohammadi-Nasrabadi, F., Gholamrezai, S., Vatanparast, H., Flora, C., & Nabavi-Pelesaraei, A. (2021). The Short-Term Effects of Covid -19 Outbreak on Dietary Diversity and Food Security Status of Iranian Households (A Case Study in Tehran Province). *Journal of Cleaner Production*, *281*, 124537.

Rajaram, R. (2009). Female-headed households and poverty: evidence from the national family health survey. *University of Georgia, USA*, 132-137.

Ratwatte, L. (2023). Converging Crises and the Cost of Exclusion: Unveiling the Invisible Women of Sri Lanka's Economy. *Journal of International Women's Studies*, *25*(3), 1-16.

Saroor, S. A. (2020). Disproportionate Effects of Covid-19 on Sri Lankan Women. https://groundviews.org/2020/08/04/disproportionate-effects-of-covid-19-on-sri-lankan-women/

Sefidgarbaei, F., & Mansouri, F. (2022). The Impacts of Covid-19 on the Women Heading their Households in Iran. *Journal of Gender Studies*, *31*(6), 742-754.

Singh, N., & Kaur, A. (2022). The Covid -19 Pandemic: Narratives of Informal Women Workers in Indian Punjab. In *the Political Economy of Post-Covid Life and Work in the Global South: Pandemic and Precarity* (17-50). Cham: Springer International Publishing.

Sumalatha, B. S., Bhat, L. D., & Chitra, K. P. (2021). Impact of Covid-19 on Informal Sector: A Study of Women Domestic Workers in India. *The Indian Economic Journal*, *69*(3), 441-461.

Women, F. (2015). A Study on the Status of Female Heads of Households and their Access to Economic, Social and Cultural Rights: Ampara District. (1-33).

World Bank. (2022). Sri Lanka Development Update: Protecting the Poor and Vulnerable in a Time of Crisis.

© *Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 